Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 10 / 2014**

DEPOSITION OF WITNESS : P.W. 6

| | | | |
|---|---|---|---|
| Name | : **ராதாகிருஷ்ணன்** | Father's Name/ Husband Name | : **ஒச்சனத்தேவர்** |
| Village | **மயிலாடும்பாறை** | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2024

(2 எதிரி ஆஜர் .1 ம் எதிரி ஆஜர் இல்லை . கு.வி.மு.ச 317 ன் படியான மனு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

நான் வருசநாடு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து 31.07.2019 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 29.11.2013 ம் வருடம் காலை 9.00 மணிக்கு கடமலைக்குண்டு காவல் நியைத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது , க.விலக்கு அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று , அங்கு சென்று அங்கு சிகிச்சையில் ஆழந்தளிர் உள்நோயாளியாக இருந்த அழகுமலைத்தேவர் மகன் சுப்புரமணி என்பவரை விசாரணை செய்து , புகார் வாக்குமூலம் பதிவு செய்து , பின்பு காவல் நிலையம்11.40 மணிக்கு வந்து கடமலைக்குண்டு காவல் நிலைய குற்ற எண் . 245/2013 , இதச பிரிவுகள் 324,506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் . புகார் வாக்குமூலம் **அசா.ஆ. 2.** முதல் தகவல் அறிக்கை **அசா.ஆ.3.**

பின்பு அன்றே 12.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் லட்சுமணன் மற்றும் சின்னவர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அசா.ஆ.4** மற்றும்

**அ.சா.ஆ.5**. பின்பு சாட்சிகள் 1 சுப்புரமணி , 2 தனவேல் , 3 பாண்டி , 4 கருப்பாயி , 5 மச்சவல்லவன் , 6 லட்சுமணன் , 7 சின்னவர் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு வழக்கின் எதிரிகளை அன்றைய தினமே 14.15 மணிக்கு பாலுத்து விலக்கில் வைத்து கைது செய்து கனம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் . பின்பு வழக்கினை மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை சம்பவம் நடந்து 16.00 மணிநேரம் கழித்து தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின் எந்த தேதியில் , எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையில் அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது , யார் விலக்கிவிட்டார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் . புகார்தாரர் சுப்புரமணிக்கு அசா.1 தனவேல் மருமகனாவார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . அவர்கள் இருவரும் ஒரே ஊரினைச் சேர்ந்தவர்கள்.

எனது விசாரணையில் சாட்சிகள் கருப்பாயி , மச்சவல்லவன் ஆகியோர் கேள்விபட்ட சாட்சிகள் ஆவார்கள். கடமலைக்குண்டு கிராமம் என்பது 3000 –4000 குடும்பங்கள் உள்ள கிராமம் என்றாலும் , சம்பவயிடம் மக்கள் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றாலும் சரிதான். சம்பவயிடத்தை சுற்றி அதிகமான கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் உள்ளது என்றாலும் நான் சொல்வது போல சம்பவம் நடந்திருந்தால் அதை பலபேர் பார்க்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மகஜர் சாட்சிகள் வெவ்வேறு ஊரினைச் சேர்ந்தவர்கள்.

சம்பவம் நடந்தது இந்தியன் ஸ்டோருக்கு எதிரில் என்றால் சரிதான் . இந்தியன் ஸ்டோருக்கும் சம்பவயிடத்திற்கும் , பேருந்து நிறுத்தத்திற்கும் 300 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். அசா.1 எனது விசாரணையில் காயம்பட்ட சுப்புரமணியை கம்பால் இடது காலில் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் . 2 வது எதிரி விசாரணையில் காயம்பட்ட சுப்புரமணியுடன் சண்டை போட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல , சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் ,

சொன்ன சாட்சிகளின் முன்பு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னாலும் , அவை வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . நான் சொல்வது போல , சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல .

புகார் வாக்குமூலத்தினை நானகவே எழுதிக்கொண்டு , காயம்பட்டவரிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல . சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் , சாட்சிகளின் வாக்குமூலங்களை நானகவே தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல . காயம்பட்டவருக்கு எங்கேயோ , எப்போதோ ஏற்பட்ட காயத்திற்கு பொய்யாக கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னாலும் , நான் சொல்வது போல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் , அந்த சம்பவத்தை யாரும் பார்க்காத நிலையில் காயம்பட்ட நபரின் மருமகனான அசா .1 யை காவல் நிலையம் வரவழைத்து சம்பவத்தை பார்த்தது போன்று சாட்சியம் தயார் செய்யப்பட்டது என்று சொன்னாலும் , வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல .

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.01.23 15:25:47 +0530